# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

## **ஆணை நாள். 02.06.2026**

## **முன்னிலை**

**திரு. வி.பி.ஆர். இளம்பரிதி, எம்.ஏ., பி.எல்., எம்.பில்.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண் CP2678-A-2023**

திருமதி. கா. மதீனா பீவி -- மனுதாரர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/
துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ),
வட்டார வளர்ச்சி அலுவலகம், -- பொது அதிகார அமைப்பு
அறந்தாங்கி,
புதுக்கோட்டை மாவட்டம் - 614 616.

## **ஆணை**

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தில் இன்று (02.06.2026) முற்பகலில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணையில் மனுதாரர் திருமதி.கா.மதீனா பீவி அவர்கள் நேரில் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு விதிகள், 2012) விதி 7(2)-ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாகும். பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு.க.பாலகிருஷ்ணன், பொதுத் தகவல் அலுவலர் அவர்களின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதியாக திருமதி.பா.வசந்தா, துணை வட்டார வளர்ச்சி (தணிக்கை), அறந்தாங்கி, புதுக்கோட்டை மாவட்டம் அவர்கள் நேரில் ஆஜரானார்.

2. மனுதாரர் 13.03.2023 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், மேற்பனைக்காடு ஊராட்சியில் பராமரிக்கப்படும் அனைத்து பதிவேடுகள் பெயர் விபரம், மேற்பனைக்காடு கிராம புல எண் 79ல் உள்ள அரசு பாலம் அமைக்கப்பட்ட வருடம் தொடர்பான தகவல்களை 14 இனங்களில் வழங்கக் கேட்டு விண்ணப்பித்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலர் தகவல் வழங்காத காரணத்தால் மனுதாரர் 17.04..2023 நாளிட்ட பிரிவு 19(1)இன் கீழான முதல் மேல்மறையீட்டு மனுவினை தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலரும் தகவல் வழங்காத

காரணத்தால், மனுதாரர் 24.07.2023 நாளிட்ட பிரிவு 18(1)இன் கீழான புகார் மனுவினை இவ்வாணையத்திற்கு தாக்கல் செய்துள்ளார். அப்புகார் மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு 02.06.2026 இவ்வாணையத்தில் நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மனுதாரர் கோரிய தகவல்களை ஏற்கனவே 26.05.2026 நாளிட்ட கடிதம் வாயிலாக முழுமையான தகவல்கள் வழங்கியுள்ளதாக ஆணையத்தில் தெரிவித்து, அக்கடித்த்தின் நகல்களை ஆணையத்தில் சமர்ப்பித்தார். மேலும், ஆணையத்தின் உத்தரவிற்கிணங்க முழுமையான தகவல்களை விரைவில் வழங்குவதாக ஆணையத்தில் தெரிவித்தார்.

5. இன்றைய விசாரணை மற்றும் ஆவணப் பரிசீலனையின் முடிவில், மனுதாரர் ஆஜராகாத காரணத்தால் மனுதாரரின் தகவல் கோரும் மனுவையும், பொதுத் தகவல் அலுவலரின் தகவலையும் இணைத்துப் பரிசீலனை செய்கையில் மனுதாரருக்கு 26.05.2026 நாளிட்ட கடிதம் வாயிலாக வழங்கிய தகவல்கள் முழுமையான தகவல்களாக இல்லை என ஆணையம் கருதுகிறது. எனவே, ஆணையம், பொதுத் தகவல் அலுவலருக்கு இறுதி வாய்ப்பளித்து, பொதுத் தகவல் அலுவலருக்கு கீழ்கண்டவாறு உத்தரவு பிறப்பிக்கிறது:-

- ***மனுதாரருக்கு உரிய காலத்திற்குள் முழுமையான தகவல் வழங்காத திரு.ம.வெங்கடேசன், அப்போதைய பொதுத் தகவல் அலுவலர், அவர்கள் மீது தகவல் பெறும் உரிமைச் சட்ட பிரிவு 20(1)ன் கீழ் நாள் ஒன்றுக்கு ரூ.250/- வீதம் ரூ25,000/- தண்டம் ஏன் விதிக்கக்கூடாது என்பதற்கான எழுத்துமுல விளக்கத்தினை ஆணையத்திற்கு 23.06.2026 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு அப்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு இவ்வாணையம் உத்தரவிடுகிறது. தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் மேற்படி ஆணையை அப்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு சார்வு செய்ய உத்தரவிடப்படுகிறது.***
- ***மனுதாரர் 6(1) மனுவில் கோரிய அனைத்து இனங்களுக்கான முழுமையான தகவல்களை உரிய ஆவண நகல்களுடன் <u>“தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 இன் படி இத்தகவல்கள் வழங்கப்படுகிறது” என்ற முத்திரையுடன் பொதுத் தகவல் அலுவலர் உரிய சான்றொப்பமிட்டு</u> இவ்வாணை கிடைக்கப்பெற்ற இரு வார காலத்திற்குள் விரைவஞ்சலில் சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி மனுதாரருக்கு தகவல்களை அனுப்பிவைத்து விட்டு அதன் பின்னர், <u>மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல்</u> மற்றும் அவருக்கு வழங்கப்பட்ட தகவலின் நகல் மற்றும் மனுதாரருக்கு அனுப்பி வைத்த கடிதத்தின் அஞ்சல் கண்காணிப்பு சான்றின் நகல் (Proof of Postal Tracking) மற்றும் விசாரணை அறிக்கையின் நகல் ஆகியவற்றினை இணைத்து ஒரு அறிக்கையாகத் தயாரித்து இவ்வாணையத்திற்கு 23.06.2026 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு தற்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு இவ்வாணையம் உத்தரவிடப்படுகின்றது.***

**ஒம்/- (வி.பி.ஆர். இளம்பரிதி)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண்: CP2678-A-2023**

**பெறுநர்**
**பொது அதிகார அமைப்பு**
பொதுத் தகவல் அலுவலர்/
துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ),
வட்டார வளர்ச்சி அலுவலகம்,
அறந்தாங்கி,
புதுக்கோட்டை மாவட்டம் - 614 616.

**மனுதாரர்**
திருமதி. கா. மதீனா பீவி
5-274 முஸ்லீம் தெரு,
மேற்பனைக்காடு அஞ்சல்,
அறந்தாங்கி வட்டம்,
புதுக்கோட்டை - 614624

JE/PA 02/06/2026